பதிவுபெற்ற பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்.

விரோதி௵ (1889) ஆவணிமீ ௨௰௪ ஸ்தாபனமானது.

## THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரிக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: | ௵ 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, | ரூ. 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: | ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:— | ஒருகலம் | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | கால்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு ஷை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௫. } யாழ்ப்பாணம்:—இரத்தாட்சி௵ ஆனிமீ ௧௨ (1924 ஜூன் 26) வியாழக்கிழமை. { இலக்கம்—கூஅ.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பாம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

---

**புத்தக விளம்பரம்.**

தெல்லிப்பழை பிரமஸ்ரீ வித்துவான் சிவானந்தையரால், இயற்றிய புத்தகங்கள் என்னிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. தருக்கசங்கிரகம், நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், நீலகண்டீயம், சேர்ந்த கட்டுவிலை ரூபா 2 00
2. நம்பி அகப்பொருளுரை ரூபா 1 00
3. இரகுவமிசம் மூலமும் உரையும் முற்பாகம் ரூபா 1 சதம் 50
4. சனிதுதி விலை அணா 1
5. தசகாரியம் அணா 5

க. செல்லம்ஐயர்,
சிவன்கோவில் வடக்குத்தெரு,
வண்ணார்பண்ணை.

சண்முகநாதன் புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம். (H. 26.)

---




**மகாவீரிய தங்க பஸ்பம்.**

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

25—8—23ல் சென்னையில் நடந்த தமிழ் வைத்திய கான்பரன்ஸ் அண்டு மருந்து கண்காட்சியில் இவர் மருந்துகள் பஸ்ட்கிளாஸ் (முதல் தர) தேவ ஔஷதங்களென தங்க மெடலும், சர்டிபிகேட்டும், பெற்றவர்.

☞ வீரிய விர்த்தியில் மன்மதனுக் கோப்பாவர்.

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகலவியாதியும் நீங்கி அபார வீரவிர்த்தியும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது. ஒரு முறைபரீக்ஷித்தால் உள்ளநாளும் மறவாதது. இது பிரபுக்களுக்கானது. இதன் அபார சக்தி உபயோகித்தவர்களுக்கே விளங்கும். இது வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும் பலத்தையும் கொடுத்து இழந்த ஆண்மைத்தனம் முழுவதும் திரும்ப உண்டாக்குகிறது. வெள்ளை, வெட்டை, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், கருமேகம், சூலை முதலிய சகல கர்ம வியாதிகளும நீங்கும். பத்தியமில்லை.

1-மண்டலம் 48-நாள் பஸ்பம் ரூபா 20, அரைமண்டலம் 24-நாள் பஸ்பம் ரூபா 10.

**குருநாக பஸ்பம்-மூலத்திற்கு.**

ஆப்ரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும். சீழ்மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4—0—0.

**குருதாளக பஸ்பம்-இருமலுக்கு.**

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு; இருமல் கட்டசுவாசம், கோளை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

**கெர்ப்ப எண்ணை.**

இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம். மாதாந்திர வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகலகெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும் மிக்க அநுபவமானது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2.

**மாந்திரீக சத்து**

இதை அணிந்துகொண்டால் சகலவசியம், நினைத்தகாரியசித்தி, தனலாபம், புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு, குழந்தைகளின் பிணி முதலியன நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2—0—0. 6-சத்து ரூபா 10—0—0.

**ரோம சங்காரி** ஐந்தே நிமிஷத்தில் ரோமத்தை நீக்கும். எரியாது தோல் கெடாது. புட்டி 1-க்கு அணா 8.

**சர்வபடை நிவாரணி**

சகலமேகப்படை, ஊறல், பூச்சிகடி, வண்டுகடி, படர்தாமரை இவைகள்ஒரேநாளில் உதிர்ந்துவிடும் உடனே அரிப்பு நிற்கும் தோல் கெடாது. புட்டி 1-க்கு விலை அணா 8.

**பிரமேக நிவாரணி.**

நாட்பட்ட பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்சுருக்கு, எரிச்சல், குத்தல் உடனே நிற்கும். நிச்சயமாய் 3-வேளையில் தீரும் தவறாது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2.

வி. பி. சார்ஜ் வேறு.

சித்த ஆயுள்வேத டாக்டர்,
**சி. மலையப்பசாமிப்பிள்ளை,**
நித்தியானந்த மெடிகல் ஹால், பழனி.

(Q. (B) 46)

---

முந்துங்கள்! முந்துங்கள்!!

குறைந்த விலை விற்பனை.

**கோல்டு மெடல் பட்டு புடவை.**

இந்த புடவையின் உடல் சாதா, கரைகளுக்கு உயர்ந்த ஜரிகையினால் டேப்பு கரையும், முகதலைக்கு ஜரிகை பல்லாவுமுள்ளது. நாகரீகத்தை விரும்பும் தற்காலத்திற்கு ஏற்றபடி தயாரிக்கப்பட்டது. கலர்கள்:—வெள்ளை, ரோஸ், வெங்காயவர்ணம், கத்தரிம்பூவர்ணம், மேகவர்ணம் முதலியவை.

12 முழம்×44 இஞ்சு புடவை 1-க்கு ரூபா 30, 35
16 மு. ×44 ,, ,, ,, ரூபா 38, 50
18 மு. ×44 ,, ,, ,, ரூபா 50, 75

**கே. எஸ். முத்தையா & கம்பனி,**
"ஸில்க் ஹவுஸ்" காசி.

(Y. 29.)

---

"ஸ்ரான்டேர்ட்"

**கொழுக்கியோடுகள்.**

**(Standard Tiles)**

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ரான்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றேம்:—

முதலாவது, இந்தஓடுகள்மிகப்பாரங்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள்நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றவது, இந்த வட இலங்கையின் தேசசுவாத்தியத்திற்கு இயைந்தஓடுகள்இவைகளே யாம். இந்த ஓடுகள்உஷ்ணகாலங்களிற்குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற மூன்றுவருடகாலமாக நாம் தருவித்து விற்றுவருகின்றேம். இந்த மூன்றுவருட காலத்துள் நாங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இது சிறந்ததென்பதற்கு இந்த ஒருநியாயமுமே போதிய சான்றாகும்.

ஓடுகள்யாழ்ப்பாணத்திலும் வல்லுவெட்டித்துறையிலும், பருத்தித்துறையிலும் எங்களிடம் பெறற்பாலன.

S. வீரகத்திப்பிள்ளை.

தந்திவிலாசம்,
"Ruby" வல்லுவெட்டித்துறை.

(H. 25.)

---

**புத்தக விளம்பரம்.**

(தபாற்செலவு வேறு).

| | ரூ. | சத. |
|---|---|---|
| பாரதம் ஆதிபருவவுரை | 3 | 25 |
| ஷை சபாபருவவுரை | 2 | 25 |
| ஷை இரண்டும் ஒரே முறையில் | 5 | 00 |
| தொல்காப்பியம் எழுத்ததிகாரம்-நச்சினார்க்கினியம் | 4 | 50 |
| ஷை சொல். சேனாவரையம் | 4 | 00 |
| அகப்பொருள் விளக்கவுரை (குமாரசுவாமிப்புலவர்பதிப்பு) | 1 | 75 |
| ஷை சிவானந்தையர் பதிப்பு | 1 | 00 |
| இலக்கியச் சொல்லகராதி | 1 | 75 |
| சித்தியார் சுபக்கம் இருவருரை | 5 | 00 |
| ஷை மு. திருவிளங்கம் பதிப்பு 4-பகுதிகள் | 2 | 10 |
| திருவுந்தியார், திருக்களிற்றுப் படியாருரை | 0 | 50 |
| தத்துவப்பிரகாசவுரை | 1 | 75 |
| திருக்குறள் சரவணப்பெருமாளையருரை | 3 | 75 |
| இரகுவமிசவுரை (முதற்பாகம்) | 1 | 50 |
| தருக்கசங்கிரகம் | 2 | 00 |
| ஜாதகபாஸ்கரன் | 3 | 50 |
| இராமாயணநாடகம் | 2 | 25 |
| இராமாயணம் பாலகாண்டம் அரும்பதவுரை | 2 | 00 |

விலாசம்:— மானேஜர்,
சோதிடப்பிரகாசயந்திரசாலை,
கொக்குவில், யாழ்ப்பாணம்.

(Q. 47.)

---

4 மாசத்தில் 200 குஷ்டரோகிகள் சொஸ்தமடைந்து விட்டார்கள்!
திமிர், குஷ்டம், தீாந்து விட்டன!
மதமதப்புமாரி சொரணையுண்டாகி விட்டன.
தடிப்புகள் மாறிவிட்டன, பத்துகள் மறைந்து விட்டன,
சொரிகள் உதிர்ந்து விட்டன, அரிப்புகள் மாறிவிட்டன,
ரணங்கள் ஆறிவிட்டன,
குன்மம், கிரந்தி, மேகமெல்லாம், தீர்ந்து, விட்டதென்று தினம்
நற்சாக்ஷிகள் வந்தவண்ணமாயிருக்கின்றன.

ரிஜிஸ்டர் செய்யப்பட்டது
அநேக நற்சாட்சிகளும் தங்கமேடலும் பரிசு பெற்ற
உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

25-8-1923-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் மருந்து வைத்திய கண் காட்சியில் இவர் மருந்துகள் பஸ்ட் கிளாஸ் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்திய ஆசிரியர் என்று பட்டமும் பெற்றவர்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். உத்தரவாத முள்ளது. குணம் இல்லை என்பவர்களுக்கு பணம் திரும்பக்கொடுக்கப்படும். வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர்: முப்புவைக் கண்டுபிடித்தவர்.

**தாம்பர பஸ்பம்.**

சகல வியாதிக்கும் கைகண்டது.
முப்புவினால் தளுக்கற நீற்றியது. களிம்பற்றது.
வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது பத்தியமில்லை.
வியாதிகளை விபரமாய் எழுதவும்.
உங்கள் வியாதிகளை மறுமுறை திரும்பிவராமல் நிவர்த்திக்கும் வல்லமை யுடையது.

20-வருஷ காலமாய் அனேக வியாதிகளுக்குக்கொடுத்து அநுபவமுள்ளது. இந்த மருந்தினால் தீராத வியாதிகள் கிடையாது. சகல வியாதிகளுக்கும் இந்த ஒரே மருந்து போதும்! ஒருமருந்துக்கும் வசப்படாத வியாதிகளெல்லாம் இந்த மருந்தில் தீருவது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. திடீரென்று சம்பவிக்கக் கூடிய ஆபத்தான சகல வியாதிகளையும் யாவரும் பிரமிக்கும்படி வெகுசீக்கிரத்தில் நிவர்த்திக்கும். சீக்கிரத்தில் குணப்படுத்துகிறதை பார்க்கும்போது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ஜுரம் 64-ஜன்னி 13-தோஷம் 7-ம் ஜாஸ்தியாகி எந்த மருந்திலும் தீராத சமையம் உட் கொண்டால் அந்த க்ஷணமே நிறுத்தும் 3-நாள் மருந்தே போதும். வெகு சீக்கிரம் பிரமிக்கும்படி வாய்வு 300-ம் இதில் அவசியம் தீரும்; வைத்தியர் தேவையில்லை, மேக நீரினால் பொறுக்கமுடியாத கைகால் குடைச்சலை உடனே நிறுத்தும். குறைநோய் சம்பந்தமான ஆராதமணங்களும், விரல்கள் அழுகிப்போயிருந்தாலுஞ்சரி அந்தமட்டில் புண்கள் ஆறிவிடும். பின் புண்ணாகாது. எந்த மருந்திலுந் தீராத எவ்வளவு நாள்பட்ட கிரந்தி, புண் புரைகளும் இதில் அவசியந் தீரும்; வெட்டை, முத்தி மொழிகளில் சூலை, வீக்கம், வலி, கை கால் குடைச்சல் கிரந்தி, நமைச்சல், மேக ஊரல், பத்து, அரிகிரந்தி, தடிப்பும் நரம்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேக வியாதிகளும் இதில் அவசியம் தீரும். ஜுரம், 64 ஜன்னி, 13 தோஷம், 7 வாயு, 26 மேகம், 21 குஷ்டம், 18 சூலை, 18 கிரந்தி, 6 திமிர், 10 குன்மம், 8 இருமல், 8 க்ஷயம், 6 காசம், 8 மூலம், 9 பவுத்திரம், அரையாப், 8 கண்டமாலை, 9 திராணி, 6 விஷநீர், 4 விக்கல், 8 வெடிப்பு ரணம், வெள்ளை, வெட்டை, தந்திமேகம், எரிச்சல், கடுப்பு, நீரடைப்பு, கல் அடைப்பு, ஆறாதபுண், புரை, குழிபுண், புற்றுக்கட்டி, பிளவை, காக்கை வலிப்புகள், பக்கவாதம், நடுக்குவாதம், மயிமதப்பு, சூதகவாய்வு, வயிற்றுவலி முதலியசகலவித கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். அனுபவத்தில் கை கண்ட அருமையான மருந்து. 80 வேளை ரூபா 40; 40 வேளை ரூபா 20; 20 வேளை ரூபா 10; ஏழைகட்கு பாதி விலை.

வைத்திய ஆசிரியர்.
**R. M. K. வேலுசாமிபிள்ளை,**
சித்த ஆயுள்வேத வைத்யசாலை, பழனி.

(Y. 31.)

# இந்துசாதனம்

யாழ்ப்பாணம்:— இரத்தாட்சி௵
ஆனி௴ 13௳ வியாழக்கிழமை.

## சட்ட நிருபண சபை

சென்ற வாரம் கூடிய இலங்கைச் சட்ட நிருபண சபைக் கூட்டத்தில் பிரதானமான இரு விஷயங்கள் எடுத்துப் பேசப்பட்டன. அவைகளுள் ஒன்று என்னவென்றால், அயிரோப்பிய மேலுத்தியோகத்தர்களுக்குக் கொடுப்பதுபோல, அயிரோப்பிய பெண்களை மணந்துகொண்ட சுதேசிகளுள் மேலுத்தியோகத்தராயிருக்கிறவர்களுக்கும் இங்கிலாந்திற்குச் சென்று மீண்டுவரும் பிரயாணச் செலவைக் கொடுத்தல்வேண்டு மென்பதாம். இதனை எடுத்துக் கூறியவர் கௌரவ மிஸ்ரர் கன்னங்காரா என்பவர்.

மற்ற விஷயம், வேதன உயர்வுக்கு முந்தி இளைப்பாறிய மணியகாரன் முதலிய தலைமை உத்தியோகத்தர்களுக்கு, வேதன உயர்வுக்குப் பின் இளைப்பாறிய தலைமை உத்தியோகத்தருக்குக் கொடுக்கப்படும் உபகாரச் சம்பளத்தோடு ஒத்த விகிதமாகக் கொடுக்கப்படல்வேண்டுமென்பதாம். கௌரவ மிஸ்டர் கன்னங்காராவின் பிரேரணையைப்பற்றி யோசித்தற்கு ஒரு கூட்டத்தார் நியமிக்கப்பட்டனர். கௌரவ மிஸ்டர் தம்பிமுத்து அவர்களின் பிரேரணை சபையில் அங்கிகரிக்கப்படாதொழிந்தது.

இதில் நாம் சிந்திக்கவேண்டியது யாதென்னில், "நான் பாலுஞ் சோறுங் கொடுத்து வளர்த்த பிள்ளைக்குக் குட்டுவேன்" என்று சொல்லி ஒரு சிறுவன் மற்றச் சிறுவனுக்குக் குட்ட, அயலே நின்ற இன்னொரு சிறுவன் "எனக்குப்பங்கில்லையோ" என்று குட்ட ஈற்றில் ஒருவனுக்கே எல்லாருங் குட்டிவிடுதல்போல, அயிரோப்பியருக்குப் பிரயாணச் செலவு, அவரைப் பார்த்து, ஐரோப்பிய பெண்களை மணந்த சுதேசிகளுக்குப் பிரயாணச்செலவு என்று முடிந்தால், செலவெல்லாம் வரியிறுக்கும் ஏழைகளின் மீதே பொறுத்ததாகு மல்லவா? ஆங்கில அரசின்கீழ் ஏழைகள் குடியிருக்கவேண்டாமா? வரியிறுக்க ஏழைகள் படும் பாடு அந்த ஏழைகளின் பிரதிநிதிகளென்றிருக்கும் அங்கத்தவர்களுக்குஞ் சம்மதமா? தங்களுக்கு நேர்ந்த இடைஞ்சலை நீக்குதற்கெனத் தெரிந்தனுப்பப்பட்ட பிரதிநிதிகள் ஏழைகளுக்கு மேலும் மேலும் இடைஞ்சலை ஆக்கலாகுமா? இந்தப் பிரதிநிதிகள் இனியேனும் பேசிவிட்டு யோசிப்பதை யொழித்து, யோசித்துப் பேசுதல்வேண்டும். ஆங்கில அரசினருக்கு வரிகொடுத்தற்கு ஏழைகள்படும் கஷ்டமோ இத்துணைத்தென்றுசொல்லுந் தரத்ததன்று. ஆங்கிலப்பெண்களை மணம் முடித்துக்கொள்ளும்படி மேலுத்தியோகம் பார்க்கும் சுதேசிகளுக்கு ஏழைகள் எப்போதாவது சொன்னதுண்டா? ஏழையழுத கண்ணீர் கூரியவாளொக்குமென்பதை அரசினரும் சபைப்பிரதிநிதிகளும் மேலுத்தியோகத்தர்களும் இனியாயினுஞ் சிந்தித்து அதற்குத்தக நடப்பார்களாக.

## சைவம்.

(கோந்த வேள்)

முக்காலத்தும் உள்ளவரும், எங்கும் நிறைந்தவரும், இயல்பாகவே பாசங்களின் விலகினவரும், எல்லாம் அறிபவரும், எல்லாஞ் செய்பவரும், ஒன்றுந் தானாகச் செய்யாதவரும், ஒப்பாருமிக்காரும் இல்லாதவரும், என்றும் மகிழ்ச்சியுடையவரும், தம்வயமுடையவருமாகிய பரமசிவம், சிற்றறிவும் சிறுதொழிலுமுடைய உயிர்கள், பாவ காரியங்களினின்று விலகி நற்செய்கைகளைச் செய்து இவ்வுலகத்தும், அவ்வுலகத்தும், எவ்வுலகத்தும் இன்பத்தை அநுபவிக்குமாறு திருவுளங்கொண்டு ஒரு கட்டளையைப் பிறப்பித்தனர். அக்கட்டளைதான் வேதம் என்பது. அவ்வேதமோ பல கிளைகளாக விரிந்தோங்கியது; ருக்வேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம் என நான்கு பிரிவாக விளங்கும். அவைகள் சமுத்திரம் போன்றன.

சுறு, திமிங்கலம், திருக்கை, அயரை முதலிய பெரிய சிறிய மீன்களும், நண்டு, நத்தை, சங்கு, சிப்பி பிறநீர்வாழ்வனவும், நுரை, பாசி, நீர்க்கொடி யாதிகளும், முத்து, பவளம், பச்சை முதலிய இரத்தினங்களும், பொற்கனி வகைகளும், பிறவும் சமுத்திரத்தில் எவ்வாறு உயர்ந்தவும் தாழ்ந்தவும் நிறைந்து உள்ளனவோ அதுபோலவே, விரிந்தசமுத்திரம்போன்ற வேதபாகங்களில், உலகத்தில் உண்டுடுத்து உறங்கி வாழ்வதே வாழ்வு என்பது முதல், கடவுளின் தன்மையை அறிந்து இரண்டற நிற்றலே இன்பம் என்று காணுதல் ஆன தன்மைகளை அங்கங்கே கூறுநிற்கும். அவ்வியல்புபொருந்திய வேதங்கள், கிரியாகாண்டம் ஞானகாண்டம் என இரண்டு வகையான பிரிவு கொள்ளும். அவற்றின் கருத்துக்களைச் சரித்திர முகங்கொண்டு விளக்குதற்காகவே புராண இதிகாசங்கள் தோன்றின. சாஸ்திரங்களும் அவ்வாறே. இவைகள் அதன் முடிவான உட்கருத்தைத் தெளிவாக விளக்கமாட்டா.

ஈசுரன், உயிர், மலத்தொடக்கு ஆன பதி, பசு, பாசநிலைமையைத் தெளிவாக அறிய விரும்புவோர் சிவாகமங்களைக் கொண்டு அறியவேண்டும். சிவாகமம் என்பது வேதத்தின் உட்பொருளை உள்ளவாறே எடுத்துக்காட்டவல்ல வேதத்தின் விரிவுரை போன்றது. வேதத்தை ஒரு பால்உள்ள பசுப்போன்றது என்றுகொள்வோமானால், ஆகமம் அப்பசுவின் கன்று போலுவமிக்கலாம். பசுவிடத்துள்ள பாலைப் பெறவேண்டுவோர் கன்றை அணையக்கொண்டு பால் கறத்தல்போல, சிவாகமங்களைக்கொண்டு வேத உண்மைப் பொருளை அறியலாம். அச்சிவாகமம் இருபத்தெட்டுப் பிரிவானது. வேதத்தைப் போலவே கிரியாபாதம், சரியா பாதம், யோகபாதம், ஞானபாதம் என உள்ளன. வேதத்தில் கிரியாபாதம், யாகம் இன்னும் சில கிரியைகள் முதலியன செய்தலும் தோத்திரமுமாமாறு போலவே, ஆகமத்தும் பிரதிஷ்டை, விழா தோத்திரமாதிகளும் கூறுகின்றன. வேதத்தில் ஞானபாதம் உபநிஷத்து; இது அத்வைதம் கூறும். சிவாகமத்தில் ஞானபாதம் சித்தாந்தம். இது அத்வைதம் பதி-பசு பாசலட்சணம் கூறும். இவற்றைச் சந்தேக விபரீதமற ஆராய்ந்தவர்களே ஜீவன்முத்தர்கள் (ஞானவான்கள்). சிவாகமங்கள் இருபத்தெட்டு. அவைபாவன: காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், சூக்குமம், சகத்திரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விஜயம், நிசுவாசம், சுவாயம்புவம், அனலம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், விம்பம், புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தான சருவோத்தியம், பாரமேச்சுரம், கிரணம், பேதம், வாதுளம். நாரசிம்ம முதல் விசுவான்மிகம் ஈறாக உபாகமங்கள் இருநூற்றேழு. உலகத்திலுள்ள சகல பிராணிகளுக்குள்ளே ஞானமுள்ள மனிதப்பிறவி கிடைத்தது மிக அருமை. இது தவறினுல் மறுபடி மனிதப்பிறவி கிடைக்குமென்பது நிச்சயமில்லை. ஆனதால் இத்தேகத்தை விட்டு உயிர் பிரியுமுன்னமே நல்வினை செய்து ஈசுரகடாட்சத்தைப் பெறவேண்டும். செய்யலாமென்று தாமதித்தாலோ இத்தேகநிலையானது - மகாசமுத்திரம் வற்றிப்போகின்றது. மலைகள் விழுகின்றன. துருவன் நிலையினின்று நழுவிப் போகின்றான்; வாயுவாகிய கயிறு அறுந்துபோகின்றது; பூமி முழுகிப்போகிறது; தேவதைகள் ஸ்தானம் விட்டு ஓடிப்போகிறார்கள். இவைகளின் கதி இவ்வாறானால், மனித தேகம் அற்பமானது; இது தாய்தந்தையரின் மல சொரூபமானது; சுகதுக்கங்களுக்கு இருப்பிடமானது; வாத பித்த சிலேத்துமதாதுக்களாற் கட்டப்பட்டது; பாபத்துக்கு இருப்பிடமானது; நிலையற்றது; ஒன்பது துவாரத்திலும் இயற்கையாய் மலக் கசிவுள்ளது; துர்நாற்றமுள்ளது; தூண்போன்ற எலும்பும், கயிறு போன்ற நரம்பும், தசை இரத்தம் இவைகளாற் பூசுந் தோற்போர்வையும் கிழத்தனம் துக்கம் நோய் இவைகள் குடிகொண்டு வசிக்கும் இடமாயும், பசி, தாகம், குளிர் அனல் இவைகளாற் பயமடைகிறதாயும், பஞ்சபூதங்களுக்கு வாழ்விடமாயும் உள்ளது. இந்தத் தேகம் எப்படி வந்தது என்று விசாரித்தால், முன்செய்த கரும வினையினால் வந்தது. கடவுள் செயலால் நடப்பது நடக்கட்டும் என எப்பொழுதும் கடவுள்மேல் ஏற்றக் கூடாது. தான் செய்த வினையைத் தான் அநுபவிக்கவேண்டும். ஈசுரன் சாட்சியாய்ப் பார்த்திருப்பன். ஆதலால் நாம் நல்வினையை விடாது செய்து பிழைக்கவேண்டும்.

விதையின்றி மரம், செடி, கொடி முதலியன உண்டாவதில்லை. தானிய முதலிய பலனுமில்லை. விதையினாலேயே விதையாகிறது. உழுது பயிர்செய்பவன் எவ்வித விதை விதைக்கிறானோ அதற்கேற்ற விளைவைப்பெறுகிறான். விதையை விதைக்கப் பெறாத பூமியானது, எவ்வாறு பலனைக் கொடாதோ, அவ்வாறு தெய்வமானது புருஷனது பிரயத்தனமின்றிப் பலனைக் கொடாது.

எவன் மனிதன்செய்ய வேண்டியதாகிய தொழிலைச்செய்யாமல் தெய்வத்தை எதிர்பார்க்கிறானோ அவன் பேடியைக் கணவனாக அடைந்த மனைவிபோல் வீணாகச் சிரமத்துக்குள்ளாகின்றான். புருஷப் பிரயத்தனமாவது, காலததிற் பலனைக் கொடுக்கிறது. இதனால்தான் மனிதன் தனக்குத்தான் பந்து, தனக்குத்தான் சத்துருவெனச் சொல்லப்படுகிறது. தெய்வம், புருஷப் பிரயத்தினம், காலம் இவை மூன்றுஞ்சேர்ந்து பலனைக் கொடுக்கிறதாக வாகிறது. பூமியிலுழுது பயிர் செய்து பலனையடைவதற்கு மழையின் சேர்க்கை வேண்டுமல்லவா? அவ்வாறு பலன்களுண்டாவதுங் காலத்தினாற்றான். தேய்வம், இஷ்டம், பாகதேயம், பாக்கியம், நியதி, விதி இவ்வாறும் முன் ஜென்மங்களிற் செய்த நல்வினை, தீவினைகளுக்குப் பெயர் என அமரத்திற் கூறப்படுகிறது. முன் ஜென்மங்களிற் செய்த நல்வினை, தீவினை யெதுவோ, அது இந்த ஜென்மத்தில் தேய்வம் என்கிற சப்தத்தினால் சொல்லப்பட்டிருக்கிறது என சப்தஸ்தோமம் கூறுகிறது. ஆனால் நல்வினை தீவினையான விதை முளையாதபடி செய்ய வல்லாருமிருப்பார்களோ? என்றால் இருக்கிறார்கள். அவர்கள்தான் மெய்ஞ்ஞானிகள். முளைப்பதாக உள்ள விதையை நெருப்பிலுள்ளிட்டு வறுத்துவிட்டால் அது முளையாதவாறு போல வினையாகிய முளையை, மெய்ஞ்ஞான அக்கினி பொடியாக்கிவிடு மென்பது நிச்சயமானது. ஆதலின் நல்வாழ் வடைவதற்கு முயற்சிக்கவேண்டும். அம்முயற்சியான்து நல்வினைகளைச் செய்வதே ஆம். அந்தப்புண்ணியகருமமும் பசுபுண்ணியம் பதிபுண்ணியம் என இருவகையானது. பதி புண்ணியமே ஒப்புயர்வற்ற பரமசிவத்தின் கருணைக்கு உரிமையாக்கும். பிறப்பு, இறப்பு அற்ற பரமேசுரரது திருவடிப்பேற்றை அடைதற்குப் பல வழி கூறுவார்கள். ஆனால் சைவாகமங்களோ நான்கு மார்க்கங்கள் கூறுகின்றன.

## பெண்களின் தமிழ்க்கல்வி.

யாழ்ப்பாணத்துள்ள தமிழ்ப்பெண்கள் சிலகாலமாகத் தமிழ்ப் பாஷையை அதிசிரமத்தோடு முறைப்படி கற்றுவருகின்றார்களென்பது எம்மனோர்க்கு மகிழ்ச்சியைத் தருவதாகும். சென்ற ஏப்ரல் மாசம் நிகழ்ந்த மதுரைத்தமிழ்ச் சங்கத் தனித் தமிழ்ப் பரீக்ஷையில் பாலபண்டித வகுப்பில் முதற் பிள்ளையாக ஸ்ரீமதி இராசநாயகம் தங்கம்மாள் சித்திபெய்தியுள்ளனர். இக்கன்னிகை ஆங்கிலத்திலும் ஸீனியர் பரீக்ஷையிற் சித்தியடைந்துள்ளனரென்பதை முன்னர்த் தெரிவித்துள்ளோம். இலங்கை ஆரிய திராவிட பாஷாபிவிர்த்திச் சங்கத்தார், சென்ற பங்குனிமாதம் நடாத்திய பரீக்ஷையில் ஸ்ரீமதி அ. சிவபாக்கியம்மாள் என்னும் பெண்மணி பிரவேச பரீக்ஷையில் அதிக திறமையோடு சித்தியடைந்துள்ளனர். மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதபரீட்சையில் விசேஷ சித்தியடைந்த இரு சிறுமிகளும் யாழ்ப்பாணத்தவரேயாவர். இங்குள்ள வேறு சில சிறுமியர் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஆரம்பவகுப்புப் பரீட்சைகளிலும் ஒரு சிறுமி ஆரியதிராவிட பாஷாவிருத்திச்சங்கப்பாலபண்டித பரீட்சையிலும் முந்திய வருடங்களிற் சித்தியடைந்துள்ளனர். இங்குள்ள ஏனைய சிறுமியரும் பெண்களும் தமக்கு அடாதகருமங்களிற்றலையிட்டு ஆப்பிழுத்த குரங்கு போல் இடர்ப்படாது முறையாகத்தமிழ்க் கல்வியைக்கற்று மேற்சொன்ன சங்கங்களால் நடத்தப்படும் பரீட்சைகளிற் சித்தியடைந்து தம்பாலார்க்குப் பெருமையையும் நன்மையையும் ஈட்டுவார்களாக.

## உலகம் பலவிதம்.

[ஸ்ரீமதி ந. சிவகாமியம்மாள் எழுதி உதவியது.]

"அருமை வாய்ந்த சகோதரிகாள், பெருமை வாய்ந்த திருமகளிர்காள், முதுமை வாய்ந்த பெருமகளிர்காள், நானும் உங்கள் சகோதரிகளில் ஒருத்தியாதலின் யாழ்ப்பாணத்துள்ள பெண்பாலார்க்கு வரும் இசையும் வசையும் எனக்கும் உரியனவேயாம்; இங்குள்ள மகளிருக்குக் கழகம் புதிதானமையினால் உங்கள் கழகத்தின் போக்கை அறியவேண்டுமென்னும் பேராசைகொண்டிருந்தேன்; ஆனால் நீங்கள் கட்டையன் வேஷம் மாறிக் கடோற்கசனுனவாறுய் உங்களை மறந்து கருமஞ்செய்யத் தலைப்பட்டுவிட்டீர்கள். எல்லைகடந்து பேசத்தொடங்கிக் கொண்டீர்கள், நானும் நீங்களும் கற்கவேண்டியவை பலவிருப்ப, கேட்கவேண்டியவை பலவிருப்ப, எம்பாலார் பொருட்டுச் செய்யவேண்டியவை பலவிருப்ப அவற்றை விடுத்து மண்குதிரையைநம்பி ஆற்றிலிறங்கத் துணிந்தவன்போல் இடர்ப்படுகின்றீர்கள். கையிலகப்பட்ட மாங்கனியை எறிந்துவிட்டு வேப்பங்கனியை உண்ண முயலுகின்றீர்கள். பெண்பாலாராகிய நாங்கள் நடந்துகொள்ளவேண்டிய முறைகள் கந்தபுராணம் காசிகாண்டம் முதலிய புராணங்களிலும் எங்கள் ஜகத்குருவாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் எழுதிய நான்காம் பாலபாடம் இரண்டாஞ் சைவவினாவிடை முதலிய நூல்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றனவே. எங்கள் மூதாட்டியர் அன்னையர் சகோதரிகள் அன்றும் இன்றும் என்றும் இவற்றைப் பின்பற்றியல்லவா நடந்துவந்தனர்; வருகின்றனர். நாவலர் பெருமான் போன்ற சைவ சித்தாந்த மகான்களின் உபதேசங்களையும் நூல்களையும் முறையே கேட்டும் படித்தும்வந்த நீங்கள், விரதமிருந்து கந்தபுராணபடனங் கேட்டுவந்த மூதாட்டியரின் அருந்தவச் செல்வியர்களாகிய நீங்கள் இப்பொழுது எங்கள் அரிய சைவசித்தாந்தத்திற்கு அந்நியர்களாயுள்ளார் உபதேசங்களைக் கேட்டு மயங்கலாகுமா? தமயந்தி சந்திரவதி முதலானவர்களைப் போல் யாழ்ப்பாணத்துப் பெண்களாகிய நாங்களும் தைரியமுடையவர்களாயிருத்தல்வேண்டுமாமே. தமயந்தி சந்திரவதி முதலானோர் தைரியத்திற் சிறந்தவர்களா? கற்பிற் சிறந்தவர்களா? தைரியமென்றது கற்பென்னுந் திண்மையைக் குறித்து நின்றதெனின் கற்பென்னுஞ் சொல்லாலேயே அதனைக் கூறிவிடலாமே. தீண்டாதவர்களை உயர்த்துவதும் ஸ்திரீகளின் தருமமென்றார் உங்கள் சொற்பொழிவாளர். இது உங்கள் சமயநூல்களில் யாண்டாயினுஞ் சொல்லப்பட்டிருக்கின்றதா? பறங்கியர் ஒல்லாந்தர் சமய நிஷ்டூரஞ் செய்து எங்கள் சைவாலயங்களை யெல்லாம் இடித்துத் தகர்த்த கொடிய காலத்தில் அரிய சைவசமயத்தை அந்தரங்கமாகச் சேமித்துப் பின்னர் எங்கள் கையில் கொடுத்தவர் எங்கள் மூதாட்டியர்களல்லவா?

* * *

இங்குள்ள பெண்பாலாராகிய நாங்கள் முதலில் சொந்தச் சமயமாகிய சைவசமயத்தைப்பற்றிய சைவ சித்தாந்த நூல்களைப் படித்துவிட்டுப் பின்னர்கைவல்லியம் முதலான சங்கர சமயநூல்களைப் படிக்க வேண்டுமாமே. சைவ சித்தாந்த நூல்களைப் படித்தபின் சங்கரசமய ஆராய்ச்சி எங்களுக்கு எதன்பொருட்டோ? ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் செய்த நூல்களாம் "குருவருட் பயன்" "சிவஞானபோதம்" "சிவஞானசித்தியார்" "சிவ(ப்)பிரகாசம்" என்று உங்களுக்குப் போதிக்கப்பட்டிருக்கின்றதே; இக்கூற்று முயற்கோடு போல் இருக்கின்றதே. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் இப்பெயர் வாய்ந்த நூல்களைச்செய்தாரென்று யான் ஒருபோதுங் கேள்விப்படவு மில்லையே. இவர் வேறு ஆறுமுகநாவலரா? திருமகளீர், நீவிர் பகற் கனவு காண்கின்றீர்களா! "மணலின் முழுகி மறைந்து கிடக்கும் நுணலுந் தன் வாயாற் கெடும்" என்பர்.

* * *

நளவர் பள்ளர் பறையர் முதலானவர்களையும் நீங்கள் தீண்ட யோசிக்கின்றீர்களாமே; இவர்களைத் தீண்டப்போகின்றோமென்று உங்கள் நாயகருக்குச் சொல்லிப் பாருங்கள், அவர் வாயிலிருந்துவரும் பதிலை அடியாளுக்கும் வெளியிடுங்கள். ஆரைத் தீண்டலாம் ஆரைத் தீண்டவொண்ணாதென்பதையிட்டுப் பெண்பாலாராகிய நீங்கள் இப்பொழுதுதானா யோசிக்கப்புகுந்தீர்கள்; நன்று! நன்று!! இந்த விதமான விபரீத எண்ணம் உங்கள் உள்ளத்திற் புகுமாறுற் காலகதியில் உங்கள் பெண் குழந்தைகளின் கதி என்னாகும்? அம்மையரே தீண்டத் தகாதவரைத் தீண்டச் சொன்னால் ஏன் மினுமினுக்கிறீர்கள்? ஏன் முறுமுறுக்கிறீர்கள்? ஏன் சாதிவித்தியாசம் பாராட்டுகிறீர்கள்? உங்களிற் பலர்உடன்படச் சிலர் மாத்திரம் ஏன் உடன்படாதொழிந்தீர்கள்? உங்களில் ஒரு அம்மை கைவீசிப் பேச மற்றை அம்மையருக்கு அப்படி வீசிப் பேசியதையிட்டு ஆச்சரியம்நேர்ந்ததென்ன? பேசக் கூசாத அம்மையார் கைவீசக் கூசுவாரா? பேசும்போது காற்பெருவிரலைப் பார்த்துக்கொண்டு பேசவில்லை என்பதா உங்கள் முறைப்பாடு? கூட்டத்திற் போய்விட்டாற் பேசவுந்தான் வேண்டும், ஏசவுந்தான் வேண்டும், கைவீசவுந்தான் வேண்டும்; இவ்விஷயம் ஆடவரை வெருளச்செய்யுமானுல், பெண்களை வெருளச்செய்யாமலிருக்குமாவென்று வியப்படைகின்றீர்கள். ஆடவர்கள் வெருண்டாற் பெண்களும் வெருளவேண்டும் என ஒரு நியதியுண்டா? இக்காலத்துப் பெண்களாகிய எங்களுக்கே ஆடவர் வெருளுகிறார்கள். அப்படிப்பட்ட ஆடவர்கள் கண்டு வெருண்ட விஷயமென்று நாமும் வெருண்டாற் பெண்பாலாராகிய "நாம் மேலேற்றமடை"வதெப்படி? யாவர் வெருண்டாலும் திருமகளிர் நீவிர் வெரு

ளாதீர்! உங்கள் ஆடவர் தீண்டாமையை ஒழிக்காதிருக்க, நீங்கள் மாத்திரம் தீண்டாமையை அவசியம் ஒழித்துவிட்டாலும் அந்த ஆடவர்களையின்றி நீங்கள் பிறரைத் தீண்டுவதற்கு உங்களுக்கு அதிகாரமில்லையே! எல்லாரையும் எல்லாருந் தீண்டத்தொடங்கிவிட்டால் விளைவது பெரும் அனர்த்தமல்லவா?

* * *

சகோதரிகளே, பெண்கோழி கூவிற் பெருங் கேடாம் என்று பெரியோர் சொல்வர். "இந்தநடை யேண்டி, இடுப்பிலே கையேண்டி" என்று எல்லாரும் எங்களை ஏசுகின்றனர். "இவ் வேடர் கொக்கைக்கெலாம் ஓர் கொடும்பழியைச் செய்தீரே" யென்றாற்போல நீங்கள் தேடும் வசை உங்களளவில் மாத்திரம் நில்லாது இங்குள்ள எங்கள் எல்லாரையுஞ் சாருகின்றது. ஆதலால் இத்தீண்டாமையை ஒழிக்கவேண்டுமேல் உங்கள் ஆடவரைத் தூண்டிப் பிறரைத் தீண்டச்செய்து பின்னர் நீங்களுந் தீண்டுங்கள். சிறுமியாகிய யான் அபிமானம் பற்றியும் நன்னோக்கங்கொண்டுஞ் சொன்ன வார்த்தை சில உங்களுள்ளத்தைப் புண்படுத்துமேற் பொறுத்துக்கொள்ளுங்கள். "மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல் இனிது, ஏனையவர் பேசுற்ற இன்சொற் பிறிதென்க"

## சமாசாரம்.

**எமது வடமாகாண ஏசன்றர்:**—முன் போஸ்மாஸ்றர் ஜெனரலாக இருந்தவரும், விடுமுறை பெற்று இங்கிலாந்துக்குச்சென்று இத்தமாத முடிவில் வருபவருமாகிய மிஸ்டர் F. J. ஸிமித் அவர்கள் வடமாகாண ஏசன்றராக நியமனம் பெறுவரென அறியலானோம்.

**சுப்பிறீங்கோடு:**—யாழ்ப்பாணத்திலே நடைபெறும் சுப்பிறீங்கோட்டு விசாரணை அடுத்த ஜூலாய்மீ 10ந்உ வியாழக்கிழமை ஆரம்பமாகும்.

**சட்ட நிருபண சபை:**—சென்ற வியாழக்கிழமை கொழும்பிற் கூடிய சட்ட நிருபண சபையில் கிழ்மாகாணப் பிரதிநிதியாகிய கௌரவ ஸ்ரீ தம்பிமுத்து அவர்கள் "இப்பொழுது இலங்கையில் வழங்கி வரும் வரிகளைக் குறைக்க முடியுமா என்பதை விசாரணை செய்யும் பொருட்டு ஒரு சபை நியமிக்கப்படவேண்டும்" எனப் பிரேரித்தனர். இப்பிரேரணை அரசாங்க அங்கத்தவராலும் சனப்பிரதிநிதிகளிற் பலராலும் எதிர்க்கப்பட்டுத் தோற்றுப்போனது.

**யாழ்ப்பாணத்திலுள்ள பயிற்றப்பட்ட ஆசிரியரும் வித்தியாகர்த்தரும்:**— இங்கு பயிற்றப்பட்ட ஆசிரியர், மிஸ்டர் எஸ். அருளானந்தமவர்களைத் தங்கள் பிரதிநிதியாகக் கொண்டு வித்தியாகர்த்தரைச் சந்தித்துத் தங்கள் குறைகளை முறையிட்டனர். வித்தியாகர்த்தர் ஆசிரியருடைய குறைகளை மிக்க ஆதரவுடன் கேட்டு அவர்களுக்கு ஊக்கமுண்டாகும் வண்ணம் விடையிறுத்தனர்.

**மோட்டர் பஸ் விபத்து:**—இந்த ஜூன்மீ 20-ந்உ வெள்ளிக்கிழமை காலை ஐந்துமணி வரையில் நிசமாருவிலிருந்து யாத்திரிகருடன் திரும்பிய ஒரு மோட்டர்பஸ் ஒருசெங்குன்றின் முகப்பில் வேகமாகச் செலுத்தப்பட்டமையினாற் கீழே விழுந்துவிட்டது. அவ்வண்டியில் ஆறு யாத்திரிகரிருந்தனர். அவர்களில் ஒரு பெண்ணுக்குச் சிறிது காயம் உண்டானது. ஷை பஸ் சாரதி மாத்துறைப் பொலிஸ்கோட்டிற் குற்றஞ் சாட்டப்பட்டு அறுபது ரூபா அபராதம் விதிக்கப்பெற்றான்.

**கல்முனைச் சைவ வாலிபர் சமாஜம்:**—இச்சமாஜத்தார் கதிர்காம யாத்திரை செய்வோருடைய வசதிக்காகவும், வாசிகசாலைக்காகவும், உபந்நியாசமண்டபத்திற்காகவும் ஓர் கட்டடம் அமைக்கவேண்டுமெனத் தீர்மானித்து முயன்றிருக்கின்றனர். இன்று பின்பகல் மூன்று மணியளவில் மேற்படி கட்டடத்திற்கு அத்திபாரம் இடப்பெறுமென ஷை சமாஜத்தார் தெரிவிக்கின்றனர்.

**விவாகத்துக்குத் தடையாயிருந்த பிள்ளைகளுக்கு நஞ்சையூட்டினான்:**—இரத்தினபுரிக்குச் சமீபமாயுள்ள மூவகாமா என்னுங் கிராமத்தில் வசிக்கும் ஒருவன் மூன்று பிள்ளைகளுக்குத் தாயாகியுள்ள ஒரு விதவையை விவாகஞ் செய்ய விரும்பினான். அப்பெண் அவனை விவாகஞ் செய்துகொள்ள விரும்பியும் அவ்விதஞ்செய்யின் தன்னுடைய பிள்ளைகள் தாபரிப்பாரின்றி அலைந்துவிடுமெனச் சஞ்சலப்பட்டாள். இதனை அறிந்த அப்பாதகன் பிள்ளைகள் மூவரையுங் கொலைசெய்ய நினைந்து நஞ்சுகலந்த சிற்றுண்டியை அவைகளுக்கு உண்ணக்கொடுத்தான். பிள்ளைகள் அதை உண்டு ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு போகப்பட்டன. மேற்படி பாதகன் இரத்தினபுரிப் பொலிஸ்கோட்டில் விசாரணை செய்யப்பட்டு ஒருவருடக் கடின வேலையுடன் மறியல் விதிக்கப்பெற்றான். பிள்ளைகள் விஷத்தினின்று மீட்கப்பட்டன.

**அமரிக்க யுத்தக்கப்பலில் நாற்பதுபேர் கொல்லப்பட்டனர்:**—அமரிக்காவிலே மிஸ்ஸிஸிப்பி என்னும் யுத்தக்கப்பலின் மேற்பாகத்திற் குண்டுப் பயிற்சி நடைபெற்றபோது ஒரு குண்டு திடீரென்று வெடித்தமையினால் 40 மாலுமிகள் உடனே கொல்லப்பட்டனர். 20 பேர் காயமடைந்தனர்

### அராலிச் சிவன்கோயில்

இக்கோயில் வெகுகாலமாக நித்தியநைமித்திகந்தாமும் குறைந்திருப்பதினால் அக்குறைகளை நிவிர்த்திசெய்யும்வண்ணம் சென்ற ருதிரோற்காரி வருஷம் ஆனிமீ 15-ந்உ கௌரவ ஸ்ரீ துரைசுவாமியவர்களுடைய தலைமையின் கீழ் ஓர் கூட்டம் நடைபெற்றுப் பல ஒழுங்குகள் தீர்மானிக்கப்பெற்றன. பின்னர் அவைகள் கவனிக்கப்பெறாதிருந்தமையினால் சென்ற வைகாசிமீ 26-ந்உ ஞாயிற்றுக்கிழமை கூடிய சபையில் ஷை விஷயங்கள் பேசப்பட்டன. அதன்பின் இந்தமீ 8-ந்உ சனிக்கிழமை ஷை கோயிற் சந்நிதானத்திற் பலர் கூடிய கூட்டத்தில், கோயில் ஆதன வரும்படிக் கணக்கை வெளியிடவேண்டுமென்றும், இல்லையாயின் தண்டற்காரர் தங்கள் வரவு செலவுக் கணக்கைக் காட்டி மிகுதிப் பணத்தை ஒப்படைக்கவேண்டுமென்றும், இதற்காக ஓர் சபை இந்த ஆனிமீ 25 ந்உ பின்பகல் ஐந்துமணிவரையிற் கூடப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டன.

### காரைநகர் இந்துவாலிப சங்கம்.

இச்சங்கத்தின் ஒன்பதாம் வருடாந்தக்கூட்டம் நிகழும் இரக்தாக்ஷி ஆனிமீ க-ந்உ (14-3-'24) சனிக்கிழமையும் அடுத்தநாளும் சுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெற்றது. சனிக்கிழமை காலை கடவுள் வழிபாடு செய்யப்பட்டது. பிற்பகல் 4 மணிதொடக்கம் 5 மணி வரைக்கும் சங்கீதவித்துவான் பிரம்மஸ்ரீ ச. பரமேசுவர ஐயர் அவர்களால் சங்கீத பஜனை செய்யப்பட்டது. பின்னர் சட்டநிருபணசபை அங்கத்தவராகிய அப்புக்காத்து கௌரவ ஸ்ரீ வை. துரைசுவாமி அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கூட்டம் ஐந்துமணியளவில் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமானது. அத்தருணம் வந்தனோபசார வாழ்த்துக்கவிகள் பாடப்பட்டபின்னர் சங்க அறிக்கைப்பத்திரம் வாசிக்கப்பட்டது. இரண்டாவதாக அடுத்த வருஷத்திற்கு நிருவாகசபை பின்னுற்காணப்படும் பிரகாரம் தெரிவுசெய்யப்பட்டது.

| | |
|---|---|
| அக்கிராசனர் ஸ்ரீ பொ. வேலுப்பிள்ளை அவர்கள் | |
| உபஅக்கிராசனர் ஸ்ரீ ஏ. ஆறுமுகம் | ,, |
| ,, ,, பிரம்ம ஸ்ரீ ச. பஞ்சாக்ஷரஐயர் | ,, |
| காரியதரிசி ஸ்ரீ இ. நாகலிங்கம் | ,, |
| தனாதிகாரி ஸ்ரீ கு. செல்லையா | ,, |
| நிருவாகசபை அங்கத்தவர் ஸ்ரீ ஆ. கனகசபை | ,, |
| ,, ஸ்ரீ இ. கந்தையா | ,, |
| ,, ஸ்ரீ க. சுப்பிரமணியம் | ,, |
| ,, ஸ்ரீ ச. கந்தையா | ,, |
| கணக்குப்பரிசோதகர் ஸ்ரீ சி. க. சுப்பிரமணியம் | ,, |

மூன்றாவதாக சங்கத்தின்பெயர் மாற்றப்படவேண்டுமென்று ஓர் கிர்ணயங் கொண்டுவரப்பட்டு "காரைநகர் சைவ மகா சபை" எனப் பெயர் மாற்றப்பட்டது.

அத்தருணம் யாழ்ப்பாணம் பரமேசுவரக்கல்லூரி ஆசிரியர் ஸ்ரீ. S. நடேசபிள்ளை B. A., B. L., அவர்கள் "சநாதனதர்மம்" என்னும் விஷயத்திலும் காங்கேசன்துறைசைவஆங்கில வித்தியாசாலைத்தலைமை ஆசிரியர் பிரம்ம ஸ்ரீ. இ. கி. சிவசுப்பிரமணிய ஐயர் B. A., L. T., அவர்கள் "ஆசிரியர் கடமை" என்னும் விஷயத்திலும் சிறந்த உபந்நியாசங்கள் செய்தனர். பின்னர் நியாயதுரந்தரர் மணியம் ஸ்ரீ. மு. சோமசுந்தரம் அவர்களும் அப்புக்காத்து ஸ்ரீ. S. R. இராசரத்தினம் B. A. அவர்களும் மகாதேவ சுவாமிகளும் அக்கிராசனரும் குறிப்புரை கூறினர். எட்டரைமணியளவில் தேவார பாராயணத்துடன் கூட்டம் முடிந்தது.

அடுத்தநாளாகிய ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிதொடக்கம் 5 மணிவரைக்கும் மாணவர் சமாஜம் நடைபெற்றது. பின்னர் ஐந்துமணியளவில் சைவ ஆங்கில வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ. பொ. வேலுப்பிள்ளை அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமானது. அத்தருணம் வந்தனோபசார வாழ்த்துக் கவிகள் பாடப்பட்டபின்னர் யாழ்ப்பாணம் பரமேசுவரக்கல்லூரிப் பிரதம ஆசிரியர் F. G. Pearce B. A. அவர்களால் சமயபாடங்களில் சித்தியெய்திய மாணவர்களுக்குப் பரிசுகள் கொடுக்கப்பட்டன. மிஸ்டர் F. G. Pearce அவர்கள் ("Our Young Men and their culture") "நம் இளைஞரும் அவர்கள் தேர்ச்சியும்" என்னும் விஷயத்தில் ஓர் சிறந்த பிரசாரணஞ் செய்தனர். பின்னர் யாழ்ப்பாணம் பரமேசுவரக்கல்லூரி ஆசிரியர் ஸ்ரீ. வி. முத்துக்குமாரு M. A. அவர்களும், ஸ்ரீ. S. நடேசபிள்ளை B. A., B. L., அவர்களும் மகாதேவ சுவாமிகளும் அக்கிராசனரும் குறிப்புரை கூறினர்.

எட்டரை மணியளவில் தேவாரபாராயணத்துடன் கூட்டம் முற்றுப்பெற்றது. —கடித.

## இந்திய சமாசாரம்.

### இருநூறு வீடுகளும் பெரிய கட்டிடங்களும் எரிந்தன.

ஜபல்பூரிலே இருநூறு வீடுகளும் சில பெரிய கட்டிடங்களும் நெருப்பினால் எரிந்துபோயின. ஆறுபேர் எரிந்து இறந்தனர்.

### பம்பாயிற் பெருநெருப்பு.

இந்த ஜூன்மீ 9-ந்உ பம்பாயிலே கிராபோர்டு மார்க்கட்டின் பக்கத்திலுள்ள (ஐந்து மாடிகளைக்கொண்ட) ஒரு பெரிய கட்டடமும் அதன் கீழுள்ள அநேக கடைகளும் நெருப்புக்கிரையாகி அழிந்தன. நஷ்டம் ஐந்துலட்சம் ரூபாவென மதிப்பிடப்படுகிறது.

### இமயச்சிகரப் பிரயாணவிபத்து.

இமயமலையின் உயர்ந்த சிகரமாகிய எவரெஸ்டைப்பார்க்கும்பொருட்டுச்சென்ற சிலவருடங்களாக ஐரோப்பியர் பெரிதும் முயற்சித்தும் அனுகூலமடையவில்லை. இச்சிகரத்தைப்பார்க்கும்வண்ணம் இப்பொழுது சென்றவர்களில் இருவர் சண்டமாருதத்தில் அகப்பட்டு மாண்டனர். ஷை பிரயாணம் பிரதிகூலமாய் முடிந்தது.

### ரவீந்திரநாத தகூர்.

கவிராயர் ரவீந்திரநாதர் சீனத்திலுள்ள நாங்காங்கில் ஒருபெரிய கூட்டத்திற் பேசியபொழுது, ஆசியா ஆசியாக்காரர்களுக்கே உரியதாக வேண்டுமென்றும் ஆசிய நாடுகளெல்லாம் ஒன்றுசேர வேண்டுமென்றும் வற்புறுத்திப் பேசினர்.

## கடிதம்.

### கதிர்காமயாத்திரையும், மாத்துறைத் தமிழ்ஐக்கிய சங்கமும்.

மாத்துறைத்தமிழ் ஐக்கிய சங்கத்தின் விசேஷ கூட்டமொன்று இம்மாதம் 22-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஐந்தரைமணியளவில் மாத்துறைப் புகைரதஸ்தானத்துக்கு முன்புறமாக மேற்படி சங்கத்தவரால் கதிர்காமயாத்திரிகர் தங்குதவற்காக அமைக்கப்பட்ட மடத்தில் நடந்தேறியது.

அத்தருணம், சங்க அங்கத்தவர் கதிர்காமஸ்தலத்துக்கு யாத்திரைசெய்யும் அடியார்களைப் புகைரதஸ்தானத்திற் சந்தித்து மடத்துக்கு அழைத்துவந்து வேண்டிய உபசாரணைகள் செய்து அனுப்பவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

இங்ஙனம்,
அ. வேலாயுதன்,
காரியதரிசி.

### சந்தேகவினு.

### இந்துசாதன பத்திராசிரியர் அவர்கட்கு.

ஐயா,

முந்திய இந்துசாதன பத்திரமொன்றில், "வண்ணைநகர் க. வைத்திலிங்கபிள்ளை" என்னுங் கடிதர், மும்மூர்த்திகளினும் மேற்பட்ட துரியசிவனே முழுமுதற்கடவுள் என்றும், அம்மும்மூர்த்திகளாகிய பிரமா விஷ்ணு உருத்திரன் என்பார் பிரளயாகலர் முதலிய பசுவர்க்கத்துட்பட்டவர்களென்றும், அன்னார் அத்துரியசிவத்தைச் சன்மாந்தரங்களிற் பூசித்த புண்ணியவசத்தால் முத்தொழில்களையும் நடாத்தும் பொருட்டு அதிகாரகர்த்தர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்றும், வைதிகசைவ சித்தாந்திகளாகிய நாங்கள் அத்துரியசிவத்தையே பரம்பொருளாகக் கோடல்வேண்டும் என்றும், மும்மூர்த்திகளை அடியார்வணக்கமாக வழிபடல்வேண்டும் என்றும், எமது சமய குரவர்களது திருவாக்குக்களையும், ஏனைய சித்தாந்தச் செல்வர்களது வாக்குக்களையும் மேற்கோள்களாக எடுத்துக்காட்டி, "பசுமரத்தில் ஆணி அறைந்ததுபோல" சிறுவர்களும் உணரும்வண்ணம் தெளிவாய் விளக்கியிருக்கின்றார். பின்னால் வெளிவந்த இரண்டு இந்துசாதனங்களில், "ந. வை. செல்லையா" என்னுங்கடிதரொருவர் வெளிப்பட்டு, கடவுள் ஒருவரே சத்துவ இராசததாமதகுணங்களைப் பொருந்திப் பிரமா விஷ்ணு உருத்திரன் என்னும் மூர்த்திகளாயிருந்து முத்தொழில்களையும் புரிகின்றார்களென்றுங் கூறி, அதற்குத்திருஷ்டாந்தமாக, இராமன் என்னும் பேருடையான், மூன்றுவித உத்தியோகத்தை நடத்தும்போது, மூன்றுநாமங்களையிட்டு அழைக்கப்படுகின்றான்; அதுபோலவே எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளாகிய பரமபதி ஒருவரே மும்மூர்த்திகளாகவிருந்து முத்தொழில்களையும் நடத்துகிறார் என்றும், அவர்களை மூவராக வகுத்துக் கூறியது புராணகற்பனை என்றும், இவைகளில் உயர்வு தாழ்வு கற்பித்துப் பதி இலக்கணத்தை ஒன்றினுக்கேற்றியும், வாதாடுங்குதர்க்கிகளும் உண்டு, என்று முதற்கடிதரைக் "குதர்க்கி" என்று தாக்கியும், சித்தாந்தப்பிரமாணங்களில் ஒன்றுவது காட்டாமலும், முழுதும் ஏகான்மவாதத்தைத் தழுவி நீண்டவியாசம் ஒன்று எழுதியிருக்கிறார். கல்வியறிவில் மேம்பட்ட பெரியோர் நியாயம்பேசும்போது பிறரைத்தாக்கிப் பேசமாட்டார்கள். நமது இரண்டாங் கடிதருக்குத் தம்முடைய கட்சியை நிலைநாட்டச்சித்தாந்த சாத்திரங்களில் ஒரு மேற்கோளாவது அகப்படாமற் போனது, அந்தோ! பரிதாபம்!! பரிதாபம்!!! அவர் ஏகான்மவாதிபாஞ்சராத்திரியாயிருந்தால் அவருடைய சொலிக்குப்போகமாட்டோம். அவர் தம்மைச்சைவசமயத்தவரென்று எழுதியதினால், அவர் கூற்று சித்தாந்தசைவத்துக்கு முரணுவதைக்கண்டு இவ்வினாவை நிகழ்த்தத்துணிந்தேம். அவ்விரண்டாங்கடிதர் கூறியபடி மும்மூர்த்திகளும் ஒருவரானால், பிரமசிரகண்டனம், அடிமுடிதேடல், இரத்தப்பலிவாங்குதல், சரபப்பட்சியாகி நரசிங்கத்தை அடர்த்தல், ஆதிவாகத்தின்கோட்டைப்பறித்தல், ஆதிகூர்மத்தின் ஓட்டைக்கவர்தல், வாமனவடிவத்தின் முதுகென்பைப் பிடுங்குதல், மீன்வடிவத்தின் கண்ணைச்சூன்றல், ஆகிய இச்சம்பவங்கள்யாவும் புராணகற்பனையா? இஃதன்றித்திரிபுரதகனம், காமதகனம் தக்கயாகசங்காரம், சீகாழி, திருவீழிமிழலை இராமேச்சுரம் முதலியதலங்களில் பிரமா விஷ்ணு உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளும் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்து பூசித்தமையும் இன்னும் விரிவஞ்சிவிடுத்த சிவபராக்கிரமங்கள் அனைத்தும் புராணகற்பனையா? அம்மம்ம! வெகுநேர்த்தி!! நேர்த்தி!!! பிரமா விஷ்ணு முதலியோர் பசுக்கள் என்பதற்கும், அவர்கட்குச் சநநமரணமுண்டென்பதற்கும், அவர்கள் அதிகாரகர்த்தர்கள் என்பதற்கும், சைவசித்தாந்த சாத்திரங்களினும், தேவாரதிருவாசகங்களினும் உலப்பற்ற பிரமாணங்களிருக்கின்றன. அவற்றுள்,

> "ஆறுகோடிபிரமர்களுங்கினர்
> ஆறுகோடிநாராயணரங்ஙனே
> யேறுகங்கைமணலெண்ணிலிந்திரர்
> ஈறிலாதவனீசனொருவனே" என்று திருநாவுக்கரசுநாயனாரும், "சதுரயுகமவையிரண்டாயிரந்தான் சென்றாற்சதுர்முகனுக்கொருதிவசந்தகையார்வாணி — பதிமகிழுந்தினத்திலொரு பகலிற்றானேபதினால் வரிந்திரர்தம்பதம்போமிந்த —விதமடைவேபிரமரொருகோடிநீங்கில் விண்டுவினுக்கொருபகலாய்விழியிற்றுஞ்சு -மதிருமாலொருகோடியிறக்குங் காலமலரமுகமவிழ்த்தலமையாண்முடிக்குநேரம்." என்றுசித்தாந்தச் செல்வரும், "கோடிவிதிமாலக்குலாவுகமலக்கண்ண, ஞேடிவடவாறுறங்குமே, —நாடுங்கால், அக்கணவர்கோடியழியிலருணகிரி, நக்கனருள்சற்றேநகும்". என்று அருணகிரியாரும், "குடங்கைநீரும்பச்சிலையுமிடுவார்க்கிமையாக்குஞ்சாமும், படங்கொள்பாயும் பூவனையுந்தருவாய் மதுரைப்பரமேட்டி". என்று பரஞ்சோதி முனிவருங்கூறியருளினார்கள். அங்ஙனம் சித்தாந்த சிரோமணிகள் இயம்பியிருக்கவும் நமது இரண்டாங்கடிதர் "மரமறியாதார்க்கு இலைபறித்துக்காட்டுவார் போன்று" ஏகான்மவாதக் கொள்கையைக் கொட்டி அளக்கிறார். கிறிஸ்தவசமய நூலிலுள்ள விதிவிலக்குக்களை இஸ்லாமதத்தவர்கள் ஒப்புக்கொள்வார்களா? அதுபோலவே ஏகான்மவாதிகளின் மதக்கொள்கைகளை சைவசித்தாந்திகள் ஒப்புக்கொள்வார்களா? கனந்தங்கிய பத்திராதிப! இவ்விரண்டு கடிதர்களுந் தீட்டிய வியாசங்களுள், யாருடைய வியாசம் நமது சைவசித்தாந்தத்திற்கு ஒத்ததென்பதைத் தங்கள் பத்திரிகையில் சித்தாந்தப்பிரமாணத்தோடு வெளிப்படுத்தி, எனது ஐயத்தை நிவிர்த்தி செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
ஓர் சந்தேகி.

[ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளையவர்கள் எழுதிய வியாசமே சைவசித்தாந்தக் கொள்கையை அநுசரித்ததாகும். ப. ர்.]

### இதுதானு சமயாபிமானம்?

சமயாபிமானம் என்பது கற்றுத்தேறிய அறிவாளிகளாற் பலசமயசாஸ்திரங்களை ஆராய்ச்சிபண்ணி உண்மைச்சமயத்தை அபிமானித்துக் கொள்ளுவது ஒன்று. மற்றது தம்சமய வளர்ச்சிக்கும் சீர்திருத்தத்துக்கும் சமயபாடசாலைகளை ஸ்தாபித்து நடாத்தலும் அம்மார்க்கத்திற் சபைகளைக்கூட்டிச் சபைமூலமாகத் தம் சமயத்தை உயர்த்த முன்னிற்பதுமாகும். இவை யாபேரும் அறிந்த விஷயங்களாம்.

அவ்வண்ணமே கிறிஸ்தவர்கள் தங்கள் சமயத்தை வளர்க்கும்வண்ணம் பல இடங்களோறும் பாடசாலைகளை ஸ்தாபித்து மிகு பணத்தையும் செலவுசெய்து இரவும் பகலும் தங்கள் சமயத்தைப் பிரசங்கம்பண்ணிச் சாதிபேதமில்லையென்றசாரமாகத் தாழ்ந்தசாதியாரிடத்தும் அன்புகாட்டி எங்கள் சைவசமயத்திலுள்ளவர்களையெல்லாம் தங்கள் சமயத்திற்குள்ளாக்கிக் கொள்ளுகிறார்கள். அந்நிய சமயத்தவர்களாகிய கிறிஸ்தவர்கள் நம் சமயத்தைத் தூஷித்துப் பிரசங்கம்பண்ணவும் எங்கள் சமயத்தவர்களாகிய தாழ்ந்த சாதியினர்களையும் அறியமிந்த பிறரையும் அழைப்பித் தங்கள் சமயத்துக்குள்ளாக்கவும், உயர்ந்தசாதி அறிவாளி

கள் ஆகிய நஞ்சுயசமயத்தவர்கள் மெடி விஷயங்களைக்கண்டும் காணுதவர்கள்போல் மௌனஞ் சாதித்தலாகிய இதுதாஞசமயாபிமானம்?

சைவாபிமானிகளென விளங்கிய மேல்வருணத்தவர்கள் ஆங்காங்கு சைவப்பாடசாலைகளை ஸ்தாபித்துத் தங்களது சாதிப்பிள்ளைகளைமாத்திரம் அப்பாடசாலையில்வைத்துப் படிப்பித்துக்கொண்டு மேடி பாடசாலைக்குச்சமீபமாயுள்ள சைவசமயத் தாழ்ந்தசாதிப்பிள்ளைகளை அப்பாலுள்ள கிறிஸ்தபாடசாலைகளில் கல்விகற்கவிட்டுப் பராமுகங்காட்டு மிதுதாஞ சமயாபிமானம்?

கர்மத்திஞற் பேதப்பட்டுத் தாழ்ந்தசாதியாயுதித்தவர்களைச் சாதிசமயதேசாசாரப்படி வித்தியாசமின்றி ஒருமித்துவைத்து நடாத்துதல் மக்கள்பாற் படாதெனக்கண்டாலும், அத்தாழ்ந்தசாதியார் எம் சமயத்தவர்களென்றும் எங்களுக்குக் குறைந்தவர்களென்றும் அவர்களிலன்புறுது 'தம்பி! அம்பட்டனுக்கேனடா சிலம்பு.' எனக் கம்பர்சொல்லியதுபோல இழிகுலத்தவருக்கேன் சைவசமயமெனக்கண்டோ அறிஞர்களாகிய தாழ்ந்தசாதிப்பிள்ளைகள்படிக்கும்படியாக ஆங்காங்கு சைவப்பாடசாலைகளை வைத்துநடாத்து மபிமானிகள் தங்களதுபாடசாலைக்கருகில், அல்லது அச்சாதியார்கள்பகுதியில் ஒவ்வோர் பாடசாலையை ஸ்தாபித்து அப்பகுதியார்களாலும் பொருளுதவிபெற்று அவர்களையும் பின்பாகமாயினுங் கூட்டிக்கொண்டு முன்னுக்கெழாது அந்நியமதஸ்தர் தம் வலைக்கிரையாகப்பார்த்துக்கொண்டிருக்குமிதுதாஞ சமயாபிமானம்?

சுருதியுக்தி அனுபவங்களால் தக்கஆராய்ச்சியின்றி அறிவழிந்து நிற்கும் தாழ்ந்தசாதியார்கள் தாங்கள் பூர்வ துர்ப்பலவினைக்கீடாக இப்பிறவியெடுத்தோமென வுணராது தங்களைமேல்வருணத்தார் வஞ்சனையால் நிந்தித்து ஆலயங்களிலும் வேறு பொது இடங்களிலும் தாங்கள் செய்ய எத்தனிக்கும் சில போலி வேடிக்கைகளுக்கும் புறக்கணித் தொதுக்கு கிறூர்களெனச் சிந்தித்து மனஸ்தாபப்பட்டிருக்குங்கால், அந்நிய மதஸ்தர்கள் வந்து அவர்கள் பகுதியிற் புகுந்து அவர்களெண்ணியபிரகாரம் உண்மையென நாட்டிச் சைவசமயத்திலொருசாரார் இன்னெருசாராரை மிருகம்போல் நடத்துகிறூர்களென்றும், எங்கள் சமயத்திற் சேர்ந்தால் ஆடை யாபரண போசன ஆசன கோயிலுட் பிரவேசித்து வணங்குதல் முதலியசுவதந்திரக்கொண்டாட்டங்கள் பேதப்படாதெனப் போதித்து அவர்களைத் தங்கள் சமயத்திற் சேர்த்துப் பின் அவர்களிடத்திலேயிருந்து வரிவைத்துப் பணமெடுத்து அவர்களுக்குத் தாங்கள் உதவிசெய்வதுபோல் நடிப்பனவைகளைப் பார்த்து மௌனஞ் சாதித்துக்கொண்டிருக்கும் இதுதாஞ சமயாபிமானம்?

செய் தீவினையே காரணமாகத் தாழ்ந்தசாதியிலுதித்தாலும் சைவசமயத்திற் பிறந்தும் அச்சமய வழிபாட்டிலுள்ள அறநெறிகளையொழுகவாற்றலின்றித் தத்தழித்துதவியற்றிருக்கு மிவ்வேழைகளிடத்துக் கிறிஸ்தசமயிகள் புகுந்து அவர்களுக்குத் தாங்கள் அற்ப பொருளுதவி செய்தும் நம்சமயத்தினின்றும் பிரிக்கும் பிறிவு மந்திரம்போல அனுப்பிப் பிரசங்கம் பண்ணியும் அவர்களைத் தங்கள் மதத்திற் சேர்த்தபிற்பாடு அவர்களைக்கொண்டே உழைப்பித்துத் தாங்கள் முன் கொடுத்த பணத்தையும் பெற்றுக்கொண்டு பின்னுமவர்களிடத்தில் வரிவைத்துப் பணஞ் சேர்த்துச் சேர்த்து அப்பாலுள்ள ஏழைச்சைவர்களையும் கொள்ளையடிக்கக்கருணையற்றுப் பார்த்துக்கொண்டிருப்பதுதாஞ சமயாபிமானம்?

ஒருவன் தன்னுடைய தோட்டத்திற்குள்ளிருக்கும் பலவிதமான பொருட்களைத் தனக்கு உபயோகப்படுத்தும் பாகுபாடுகள்தெரியாமையினுல், அல்லதுஊக்கப்படாமையினுல் எமாந்திருக்க இன்னெரு அந்நியன் பிரயாசையால் அத்தோட்டத்தில் தேடுவாரற்றிருந்த பொருட்களையெல்லாம் தனக்குபயோகமாக்கிக்கொண்டமைபோல, சைவசமயத் தோட்டச்சொந்தக்காரராகியபிராமணர் வேளாளர்முதலியவர்கள் அத்தோட்டத்தில் உபயோகமின்றிக்கிடக்கும் பொருட்கள்போன்ற ஏழைகளாகிய தாழ்ந்தசாதியார்களை அந்நிய கிறிஸ்தவர்கள் தங்கள் சமயத்துக்கு அனுப்பிக் கொள்ளையடிப்பதைப்பார்த்துக்கொண்டு அபிமானமற்றிருக்கும் இதுதாஞ சமயாபிமானம்?

கல்விகேள்வி அறிவான் மிக்க பெரியோரே! சைவப்பாடசாலை அதிகாரிகளே!! சைவாபிமானச்செல்வர்களே!!! ஏழைகளாகிய தாழ்ந்தசாதியினருங் கல்வியறிவிஞற்றுன் சமயத்தைப்பற்றியும் கர்மவிசேடணங்கள் முதலியபாகுபாடுகளைப்பற்றியும் நன்குணர்ந்து மரியாதையாகச் சீவிப்பர். ஆதலினுல் மேற்கூறியவைகளை அபிமானித்து, தாழ்ந்தசாதியார்கள் வசிக்கும் ஒவ்வோரிடத்திலும் பாடசாலைகளை ஸ்தாபித்து, அப்பகுதியார்களிடமும் அன்புகாட்டி அவர்களிடம் பொருளுதவி பெற்றும் பாடசாலைகளை நன்கு நடைபெறச்செய்தும் அந்நிய சமயிகளின் ஆவேசத்தை அகற்றிவிடும்படி வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
கா. சூரன்.
வதிரி தேவரையாளிச்
சைவவித்தியாசாலை.

## விளம்பர மறுப்பு.

கைதடி நாவற்குழி குடி சிதம்பரநாதர் சின்னத்தம்பி பெண் சின்னம்மா ஆகிய நான் எல்லாகொத்தாரிசுமாருக்கும் மற்றுமுள்ளோருக்கும் இதனுல் தெரிவிப்பது யாதெனில் எனது தகப்பனுராகிய ஆறுமுகம் சின்னப்பா எனக்குக் குணபேதமென்றும் என் புருஷன் சிதம்பரநாதர் சின்னத்தம்பி யென்பவர் என்னை அனுப்பி முன் ஒருகொள்விலைக்காணியைவிற்றுவிட்டாரென்றும் இப்போதும் என் சீதனக்காணியைத்தன்பேருக்கு எழுதுவித்தற்கு என் புருஷன் ஆயத்தப்படுத்துகிறூரென்றும் இந்துசாதனம்90-ம்91-ம் 92-ம் இலக்கப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தியிருக்கின்றூர். எனக்கு எவ்வகையான குணபேதமும் இல்லையென்றும் கொள்விலைக்காணியை நானும் மனமொத்து விற்றதேயன்றி அனுப்பி விற்கவில்லையென்றும் என்சீதனக்காணியைத் தன்பேருக்கு எழுதுவித்தற்கான நோக்கம் அவரிடத்திலே அற்பமேனும் இல்லையென்றும் இதனுற் சகலருக்குந் தெரிவிக்கின்றேன்.

இப்படிக்கு,
சி. சின்னம்மா.

கைதடி-நாவற்குழி,
20-6-24.
(Mis. 502.)

[குறித்த சின்னம்மா இவ்விளம்பர மறுப்பை எமது சமுகத்திலேயே எழுதிக் கைச்சாத்திட்டுள்ளனர். அச்சமையத்து யாம் ஆராய்ந்தவரையில் மேற்படி சின்னம்மாவிற்கு யாதுங் குணபேதமிருப்பதாகக் காணவில்லை. மேலும், எவ்வகையான குணபேதமு மில்லையென யாழ்ப்பாணம் டக்றர் ஸ்ரீ சிவசிதம்பரமவர்கள் ஒருஅபிப்பிராயபத்திரம் (சேர்டிவிக்கற்) கொடுத்திருக்கின்றூர்.
—பத்திராசிரியர்.]

## தேக்க மரம்.

றங்கூனிலுள்ள பேர்போன அங்கிள கொம்பனியாரிடமிருந்து புதிதாக வருவிக்கப்பெற்றதிறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடி தொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்கிருக்கின்றன, விலைவிபரத்திற்கு எமக்கெழுதவும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானுறு.

தந்திவிலாசம்:—
ஹாபி. வல்லுவெட்டித்துறை.
(H. 29.)

## திறமானமங்களூர்ஓடுகள்

மெஸ்சேர்ஸ் மோர்க்கன் அன்கோ அல்வாரிஸ் அன்கோ திறமோடுகளும் அரையோடுகள், முகட்டோடுகள், காற்றேடுகள், பீலியோடுகள், கண்ணுடியோடுகள், சித்திர சகிதமானஓடுகள் தளவரிசைக்கற்கள், பூச்சட்டிகள் திறம் போட்லாந்து சிமெந்து முதலானவைகளும் சகாயமான விலைக்குப் பின்வரும் விலாசத்தாரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கா. வ. சுப்பிரமணியம்,
ஒட்டுக்கம்பெனி,
தேவரீர்குளம்,
யாழ்ப்பாணம்.
(H. 23).

## ஞானேதய வாசிகசாலை.

இது யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை மூத்தநயினுர்கோயில் வடக்கு வீதியில் ச. பஞ்சாட்சரக்குருக்களாகிய என்னுடைய கிருகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதில் 1000 ரூபா வரையிற் பெறுமதியான சைவ, வைஷணவமதங்களுக்குரிய புத்தகங்கள். எவரும், எளிதில் வாசிக்கக் கூடிய ஏற்பாட்டுடன் வைக்கப்பட்டிருக்கின்றன. இதை விருத்தி செய்தற்குத் தமிழகத்தார் யாவரும் தக்க பொருளுபகரிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ச. பஞ்சாட்சரக்குருக்கள்,
ஆனைக்கோட்டை.
(Mis. 490.)

**பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக.**

இனும்! இனும்!! இனும்!!!

இதனடியில் கண்ட மருந்து வாங்குகிறவர்களுக்கு மட்டில்

வைத்திய சாஸ்திரத்தில் அதிக அனுபவமுள்ள ஹக்கீம் K. முகம்மது யூசுபு அவர்களால் செய்யப்பட்ட (வைத்திய சாஸ்திர நீதிநூல்) 96 பக்கம் அடங்கிய புஸ்தகம் ஒன்று இம்மருந்துடன் இனமாக அனுப்பப்படும். மானிட சரீரத்தில் பரவும் பல நோய்கள் வீரியபலஹீனங்கள் நரம்புத் தளர்ச்சிகள் வீரிய நஷ்டத்தின் விபரங்கள் அது ஜனித்த காரணங்களையும் அதன் குணங் குறிகளையும் அதற்கு மருந்தும் பரிகாரமும் சரீரத்தில் உள்ள சில ரகசியமான விஷயங்களையும் வைத்தியரிடம் வெளிப்படுத்தாமல் தனக்குத் தானே அறிந்துகொள்ளக்கூடிய அருமையானதோர் சாஸ்திரமாயிருக்கின்றது.

அவுஷதங்களில் அருமையான வித்தை.

ஜெகப்பிரசித்தி பெற்ற

# சிட்டுக்குருவி அமிர்த லேகியம்.

பலமில்லாமல் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளையும் உலக வாழ்க்கையில் பிரியமில்லாமல் சஞ்சலப்படும் மனதையும் ஒருவேளை லேகியம் சாப்பிட்ட பிறகு ஆச்சரியப்படும்படி நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாக்கும்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதமுள்ள உண்மை அவுஷதம் குணமில்லையென்று ருபிக்கிறவர்களுக்கு பணத்தைத் திருப்பிக் கொடுக்கப்படும்.

வீரியபுஷ்டியையும் மன உற்சாகத்தையும் கொடுப்பதில் இதற்குச் சமயாய் எதைக் காட்ட முடியும். இதனை அனுபவித்தவர்கள் இப்பெருமை தங்கிய மருந்திற்கு உள்ள அபூர்வசக்தியைப் போலே இவ்வுலகத்தில் வேறு எந்த மருந்திற்கும் இல்லையென்று அனேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எழுதியிருக்கிறூர்கள்.

அன்பனே! இதுவரையிலும் வீரியதத்துவத்திற்காகவும் நாடி நரம்பு களின் உற்சாகத்திற்காகவும் மூளையைப் பலப்படுத்தி ஞாபகசத்தியை விர்த்திசெய்யவும் தேககாங்கையினுல் நீற்றுப்போகும் பலஹீனம் பற்பல வாய்வுரோகம் இடுப்புவலி கைகாலசதி மலச்சிக்கல் பசிமந்தம் இவைகளுக்கெல்லாம் எத்தனையோ விதமான அவுஷதங்கள் சாப்பிட்டிருப்பீர்கள். அவைகளுக்கெல்லாம் இது முதல்தரமான மருந்தென்று தங்களின் சிநேகிதர்பால் புகழ்ந்து பேசுவீர்கள். பத்தியமில்லை.

முக்கிய கவனிப்பு:—சில போலி சிட்டுக்குருவி லேகியங்கள் ஆயிரக்கணக்கான ரூபாய் இனுமென்று சபதங்கள் கூறிக்கொண்டு பல விளம்பரங்கள் வெளிவந்துகொண்டிருக்கிறபடியால் எமது விலாசத்தைக் கவனித்து ஆடர் செய்யவேணும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 40 நாள் | 80 வேளை | டப்பி 1க்கு | விலை | ரூபா | | 10—0—0 |
| 20 ,, | 40 | ,, | ,, | ,, | ,, | 5—0—0 |
| 10 ,, | 20 | ,, | ,, | ,, | ,, | 2—8—0. |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

இந்தியா, பர்மா, சிலோன் இம்மூன்று தேசங்களுக்கும் வி. பி. யில் மருந்து அனுப்புவோம். பினங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேச வாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் செலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணம் அனுப்பினுல் மட்டில் மருந்து அனுப்பப்படும்.

விலாசம்:

ஹக்கிம் கா. முகம்மது யூசுபு,
முகம்மதியா வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, (தென்னுற்காடு ஜில்லா)

Hakeem K. Mohamed Yoosoof,
*Mohamedia Medical Hall,*
Porto-Novo, S. A. Dt.(INDIA.)

(H. 27.)

உங்கள் குழந்தைகளுக்கு

# லக்ரொஜின்

என்னும்

இயற்கையான பாலுணவை ஊட்டி
நன்மையடையுங்கள்.

இந்தப் பாலுணவே
முலைப்பாலுக்குச் சமானமானது.

இது
தசையையும் என்புகளையும் விருத்தி செய்யும்
சக்திவாய்ந்தது.

இந்த உணவை உண்டு வளர்ந்த குழந்தைகள்
இறுக்கமான தசைநார்களும்
அரோகதிடகாத்திரமு முடையவர்களாய்
இருக்கிறூர்கள்.

லக்ரொஜின்

சவலைகளைப் பராக்கிரம முடையவராக்கும்.

இந்த உணவை
இலங்கையிலுள்ள ஔஷதசாலைகளிலும்
கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி இடங்களில் கிடைக்காவிடில்
நேரே எங்களுக்கு எழுதுங்கள்.

மாதிரி லக்ரோஜின் உணவும் அதின் விபரங்களடங்கிய புத்தகமும் உடனே அனுப்பப்படும்.

பிறீ கூப்பன்.

நெஸ்லின் & அங்கிளோ சுவிஸ்
கொன்டென்ஸ்ட் மில்க் கோ.,
தபாற்பெட்டி, 189,
கொழும்பு.

தயவுசெய்து உங்கள் அரிய புத்தகத்தில் (Baby Book) ஒன்றும், மாதிரி லக்ரொஜின் உணவும் கிரயமின்றி அனுப்பவும்.

.H .O

பெயர்:— ..........................................

விலாசம்:— ..........................................

(Q. 49.)

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.